இனிப்பு, சொக்கலட், பிஸ்கட் மற்றும் பழவற்றல்கள் விற்பனையாளர்
கணேஷா வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

தேக் தயாரிப்பு பொருட்கள் மற்றும் குளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட
கணேஷா வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 15 திங்கட்கிழமை (28 - 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 121

# 75 கோடி ரூபாவுக்கு 5 யுத்தக்கப்பல்களை வாங்கும் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு திடீரெனக் கைவிட்டது

## நிதிப்பற்றாக்குறை காரணம் கடற்படைத் தளபதி எரிச்சல்

கொழும்பு மார்ச் 28

சீனாவிடமிருந்து 75 கோடி ரூபாவுக்கு ஐந்து போர்க்கப்பல்களை வாங்குவதற்கு திட்டமிட்டிருந்த ஸ்ரீலங்கா அரசு திடீரென அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டது.

நிதிப்பற்றாக்குறை காரணமாகவே அரசு இந்தத்திட்டத்தைக் கைவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அரசின் இந்த முடிவு கடற்படைத் தளபதிக்கு கடும் எரிச்சலைத் தந்திருக்கிறது.

''சண்டே ஐலண்ட்'' ஆங்கில வார இதழ் இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இக்கப்பல்களை வாங்குவதற்காக ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹான் சமரசேகரா சீனா சென்றிருக்கிறார்.

ஆனால் அவர் சீனா சென்ற பின்னர் —

நிதிப்பற்றாக்குறை காரணமாக ஸ்ரீலங்கா அரசு கப்பல் வாங்கும் திட்டத்தையே கைவிட முடிவு செய்திருக்கிறது.

இது கடற்படைத் தளபதிக்கு கடும் எரிச்சலைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவ பீடத்துக்கு 64 மாணவரே தெரிவாகினர்!

கொழும்பு, மார்ச் 28

1993 / 94 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக தெரிவு வெட்டுப் புள்ளிகளின் படி யாழ் மருத்துவ பீடத்துக்கு 64 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கான —யாழ். மாவட்ட வெட்டுப் புள்ளி நிலை — 266 என ஏற்கனவே ''உதயன்'' செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளிகளை வெளியிடும் நிகழ்ச்சி பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

புதிய வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் இம்முறை 8 ஆயிரத்து 801 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். கடந்த வருடத்தில் தெரிவான 8 ஆயிரத்து 325 பேரிலும் பார்க்க 476 பேர் இம்முறை கூடுதலாக அனுமதி பெற்றுள்ளனர்.

மருத்துவதுறைக்கு 788 பேர் தெரிவாகியுள்ளனர். கடந்த வருடம் 817 பேர் தெரிவாகியிருந்தனர்.

பல். மருத்துவத்துறைக்கு 74 பேர் தெரிவாகியுள்ளனர். கடந்த வருடம் 80 பேர் தெரிவாகியிருந்தனர்.

பொறியியல் துறைக்கு இம்முறை 621 பேர் தெரிவாகியுள்ளனர். கடந்த வருடம் 634 பேர் தெரிவாகியிருந்தனர்.

கலை, பௌதிக விஞ்ஞானம், முகாமைத்துவக் கல்வி

(6 ஆம் பகம் பார்க்க)

பல்கலை. அனுமதி வெட்டுப்புள்ளி! விவரம் கடைசிப் பக்கத்தில்

## வன்முறைகள் வெடிக்கலாம் என அச்சம்!

## தென் மாகாணத்தில் அரசு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

தென் மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் முடிவுற்று மூன்று தினங்கள் கடந்த பின்னரும், அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு தொடர்ந்து தீவிரப்படுத்தியிருக்கிறது.

படையினர் தொடர்ந்து குவிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடைபெற்ற காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இரவுநேர ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கிறது.

நேற்று இரவு 8 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று காலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

தென் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி வெற்றியீட்டியிருப்பதை அடுத்து, அங்கு அரசுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறலாம் என அஞ்சப்படுவதாகவும் —

அதன் காரணமாகவே பாதுகாப்பு தொடர்ந்து தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாணத்தில் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் —

விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இருக்கும் என்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

## தெற்குத் தேர்தல் முடிவினால் பங்குச் சந்தையிலும் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 28

தென் மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகள் அரசாங்கத்துக்குப் பாதகமாக அமைந்ததைத்தொடர்ந்து கொழும்பு பங்குச் சந்தைப் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெள்ளிக்கிழமை அதிகாலை வெளிவந்தன. அன்றைய தினமே பங்குகளின் பெறுமதி திடீரென வீழ்ச்சி கண்டது. முதல் நாள் வியாழக்கிழமை 1259.89 ஆக இருந்த விலைச் சுட்டி வெள்ளியன்று 1239 01 ஆக வீழ்ச்சி கண்டது. அதன் பின்னர் கொழும்பு பங்குச் சந்தை இன்று கூடவுள்ளது. பங்குகளின் பெறுமதி மேலும் வீழ்ச்சி காணலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

எனினும் அரசதரப்பு அதிகாரிகள் பங்குச்சந்தை அடுத்த சில நாட்களில் முந்திய நிலைக்கு வந்துவிடும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

இத்தகைய வீழ்ச்சியின் காரணமாக பங்குச்சந்தை பெரிதாகப் பாதிக்கப்பட மாட்டாது என்றும் —

விலைகள் புனரமைக்கப் பட்டுள்ளதால், நிலைமை வெகு விரைவில் சீரடைந்து விடும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் — மத்தியவங்கி ஆளுநர் எச்.வி. [illegible] தெரிவித்தார்.

முச்சந்தி முனி



அப்ப .. கப்பல் வாங்கிற திட்டம் கவுண்டு போச்சுது எண்டு சொல்லுங்கோ.. !

### சாவகச்சேரியில் ஹெலித் தாக்கு

சாவகச்சேரி, மார்ச் 28

நேற்று முந்தினம் இரவு 7.30 மணிக்கு பூநகரிப்பக்கமிருந்து வந்த ஹெலிகொப்டர் சாவகச்சேரி நகரப்பகுதியில் வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-31)

### மட்டக்களப்பில் மோதல்

கொழும்பு, மார்ச் 28

மட்டக்களப்பு மாவட்டம், அங்கொடவில என்னும் இடத்தில் கடந்த வெள்ளி விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

### மண்டைதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்று யாழ் நகரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுப் பகல் 2 மணியளவிலும் நேற்றிரவும் மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் நகரை அண்டிய பகுதிகளில் வீழ்ந்தன.

(உ-3-15-162)

## சபாநாயகரின் யாழ். விஜயம் புலிகளுக்கு கிடைத்த வெற்றி!

### 'சண்டே ரைம்ஸ்' விமர்சனம்

கொழும்பு, மார்ச் 28

சபாநாயகர் முகம்மதுவின் யாழ். விஜயத்தின் பெறுபேறு என்னவாக இருந்தாலும் — புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குச் சென்று அங்கு அவர்களின் தலைவர் பிரபாகரனை முகம்மது சந்திப்பது புலிகளுக்கு பிரசார ரீதியில் கிடைத்த வெற்றியாகும்;

— இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதில் சபாநாயகரின் உத்தேச விஜயம் குறித்து குறிப்பிட்டுள்ள முக்கிய விடயங்களின் சாரம் வருமாறு:-

★ சபாநாயகரின் யாழ். விஜயத்துக்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார். சபாநாயகர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைப் பார்க்கிலும் விடயங்களை அறிந்து வரும் விஜயத்தில் ஈடுபடுவதையே ஜனாதிபதி எதிர்பார்க்கிறார்.

அண்மைக் காலங்களில் ''பேச்சு மூலமான தீர்வையும் சமாதானப் பேச்சுவார்த்தையையும் வரவேற்பதாக'' புலிகள் கூறிவருகின்றனர்.

இதன் உண்மை நிலை குறித்து சபாநாயகர் அறிந்து வரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

★ தற்போது பாரிஸில் தங்கியிருக்கும் சபாநாயகர் முகம்மது அங்குள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர்களோடு தமது யாழ் விஜயம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் றேடார் நிலைகளை அழிக்க படைகளுக்கு பணிப்பு

கொழும்பு, மார்ச். 28

வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் நடமாடும் றேடார் நிலையங்களையும், நாகதேவன் கடற்படைத் தளத்தில் இருந்து புலிகளால் எடுத்துச் செல்லப்பட்ட 'வோட்டர் ஜெட்' படகுகளையும் அழிக்கும் பொறுப்பு விமானப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த நடமாடும் றேடார் சாதனங்கள் மூலம் விமான மற்றும் கடற்படையினரின் நடமாட்டங்களை புலிகள் கண்டறிந்து அதற்கேற்றவாறு நடப்பதாக இராணுவத்தரப்பு நம்புவதாகவும் —

அவற்றை அழிக்காவிட்டால் வடபகுதியில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள இராணுவ நடவடிக்கையின் போது பாரிய இழப்புக்களை சந்திக்க நேரிடும் என்று பாதுகாப்பு படையினர் கருதுவதாகவும்— அப்பத்திரிகை செய்தி மேலும் கூறுகிறது. (உ-3)

## மணலாற்றில் தாக்குதல்! இரு சிப்பாய்கள் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், மார்ச் 28

நேற்று முன்தினம் மணலாறு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி இந்திய வானொலி இத்தகவலை வெளியிட்டது.

சிங்களக் குடியேற்றங்களுக்கு அருகில் உள்ள இராணுவ முகாமை அண்டிய பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது

மணலாறுப் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்றும் —

இவரைக் காப்பாற்றச் சென்ற மற்றொரு இராணுவச் சிப்பாயும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்தார் என்றும் —

வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

(உ-3)

## இனவாதிகளுக்கு தெற்கு மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளனர்!

### தொண்டமான் சாட்டை

கொழும்பு, மார்ச் 28

சிறுபான்மை மக்களை ஒதுக்கி அரசியல் நடத்த இயலாது என்பதை தென் மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன.

இனவாத அரசியல்வாதிகளுக்கு தென்பகுதி பெரும்பான்மை, சிறுபான்மை மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளனர்.

அமைச்சர் எஸ். தொண்டமான் தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இந்நாட்டில் மாறிமாறி ஆட்சிபீடமேறிய கட்சிகள் இனவாதத்தை வைத்தே அரசியல் நடத்தி வருகின்றன. இனவாத ரீதியில் செயற்படுவதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டும் செயற்பட்டன. மக்களும் வேறு வழியின்றி இவர்களை மாறிமாறி ஆதரிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எம்மைப் பொறுத்த வரும் பான்மை இன மக்கள் இனவாதிகள் அல்ல. அம்மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு தனது தூதுக்குழுவை அனுப்பி பிரபாகரனுடன் நேரில் பேசவேண்டும்

### சு. கவின் சிரேஷ்ட தலைவர் கே. பி. இரட்னாயக்கா எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 28

அரசாங்கம் தனது தூதுக் குழுவை அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. [illegible] வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் எம்.பியுமான கே. பி. இரட்னாயக்கா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் அவர் மேலும் கூறியதாவது:

''தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என நோக்கா தீர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனரேற்றர் திருட்டு

யன்மார் (T.S 105) 10 H. P. என்ஜினும் 3 K W இங்கிலிஸ் டைனமோவையும் கொண்ட ஜெனரேற்றர் 12 - 03 - 94 அன்று திருட்டுப் போய் விட்டது மேற்படி தினத்திற்குப் பின் மேற்குறித்த என்ஜினையோ, டைனமோவையோ யாராவது விற்பதற்குக் கொண்டு வந்தாலோ அல்லது இதனைப் பற்றிய தகவல் தெரிந்தாலோ தயவு செய்து கீழ்க் கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஜெ. மண்டலேஸ்வரன்

115/1, கோவில் வீதி, நல்லூர்.
[30116] (நல்லை ஆதீனத்திற்கு பின்புறம்)



## இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான திருச்சபாத் திருப்பணி
## பரிபாலன பரிமாற்றமும் மக்கள் அறிவிப்புக்கான பகிரங்கக் கூட்டமும்

இடம்: சிவகாமசுந்தரி சனசமூக நிலைய முன்றில்

காலம்: 30 – 03 – 1994 பிற்பகல் 7-00 மணி

குறிப்பு:
மேற்படி பணிக்கு நிதி அன்பளிப்பு செய்த அனைவரும் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

தலைவர்,
இணுவை சிவகாமி
அருள்நெறி மன்றம்.

சிவகாமபுரம்,
இணுவில் கிழக்கு
இணுவில்.
[30114]


# தெற்கு தேர்தல்முடிவு காட்டுவது தேசிய எழுச்சிப் போக்கை அல்ல

## தோல்வி குறித்து அமைச்சர் சிறிசேனகூரே கருத்து

கொழும்பு, மார்ச் 28

தென்மாகாணசபை தேர்தல் முடிவுகளை ஒரு தேசிய எழுச்சிப் போக்காக கருதமுடியாது என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

தெற்குத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வியுற்றது குறித்து கருத்துக் கேட்ட போதே அவர் இப்படிச் சொன்னார்.

காலம் சென்ற ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் கால கட்டத்தில் துரிதமாக அமுல் படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் மூலம் வறுமை ஒழிப்புக்கும், அபிவிருத்திக்கும் அவர் ஒரு பாதையை உருவாக்கினார். அவரின் ஆக்கபூர்வமான — முற்போக்கான — கொள்கைகளையும் செயற்திட்டங்களையும் நாம் தொடர்ந்து முன்கொண்டு செல்ல வேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

தென்மாகாணசபை தேர்தலில் தமது கட்சி தோல்வி அடைந்திருப்பதை கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் — இத் தோல்வியைத் தொடர்ந்து தமது கட்சியை முழுமையாக மறுசீரமைக்க முடிவு செய்துள்ளது என்றும் — தோல்வியை ஆராய்ந்து அடுத்து வெற்றி பெறுவது குறித்து கட்சி ஆராய்ந்து வருவதாகவும் — கட்சிப் பொதுச் செயலாளரான சிறிசேனகூரே மேலும் தெரிவித்தார். (உ-3)

# கெப்பற்றிக்கொல்லாவையில் 2 சிங்களவர்கள் கடத்தல்

கெப்பற்றி கொல்லாவை, யக்காவெவா கிராமத்தில் இருந்து இரு சிங்களக் கிராமவாசிகள் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து யக்காவெவ, இதிகொல்லாவெவ ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் பதற்றமடைந்துள்ளனர் எனத் தரிவிக்கப்படுகிறது:

இரு குழந்தைகளின் தந்தையான சந்திரசேகரசரத் விஜேசிங்க, 25 வயது இளைஞன் தருமபால ஆகியோர் கடந்த 29 ஆம் திகதி தங்கள் சேனைப் பயிர்ச் செய்கையைப் பார்வையிடச் சென்ற இடத்திலேயே இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ-6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கந்தையா மயில்வாகனம்
(பண்டத்தரிப்பு, அம்பாள் ஸ்டோர்ஸ் உரிமையாளர்)

பிறப்பு: 26 – 03 – 1936
இறப்பு: 27 – 02 – 1994

எங்கள் குடும்பத் தலைவன் பண்டத்தரிப்பு அம்பாள் ஸ்டோர் உரிமையாளர் கந்தையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டி நாளை (29 - 03 - 1994) செவ்வாய்க்கிழமை அன்னாரது சில்லாலை இல்லத்தில் நடைபெறும். தனிப்பட்ட அறிவித்தல் இல்லாதபடியால், வசதிக் குறைவால் மரண வீட்டுக்கு வரமுடியாதவர்களும், அவரது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அந்தியேட்டிக் கிரியைகளில் தவறாது பங்குபற்றும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மகன்
சிறிஸ்கந்தராசாவும்
மயில்வாகனத்தின்
சகோதரர்களும்

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.
[30112]



உ
சிவமயம்

## திருமணம்

அன்புடையீர்!

மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 18 ஆம் நாள் (31 - 01 - 1994) திங்கட்கிழமை சதுர்த்தி திதியும், உத்தரம் நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 9-00 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் சுபவேளையில்,

S S சந்தப்பிள்ளை தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
ராகவன்
B Sc. (Cey.) Computer Engineer U.K.

T. செல்லத்துரை தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
ரஞ்சனி
B. Com. (Cey )

ஆகிய இருவருக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கருணையால் திருமணம் மதுரை "ஹோட்டல் தமிழ் நாடு" (Hotel Tamil Nadu) மண்டபத்தில் இனிது நிறைவெய்தியது. இம் மங்கல நிகழ்வினை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தங்களன்புள்ள

T. செல்லத்துரை தம்பதிகள்,
(Beauty House)
சுரும்பசிட்டி கிழக்கு,
தெல்லிப்பளை.

S. S. கந்தப்பிள்ளை தம்பதிகள்,
2 ஆவது குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

தற்போதைய முகவரி:
"கோகுலஸ்தான்",
விளையாட்டரங்க வீதி,
கலியங்காடு, யாழ்ப்பாணம்.

இருவீட்டார் அறிவிப்பு

[30115]



யா/ கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை
## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

1994 04·25 ஞாயிறு மாலை 4 மணி

அன்பார்ந்த பழைய மாணவர்களே!

எமது பாடசாலையில் கற்று வெளியேறிய நாம் நீண்ட இடைவெளிக்குப்பின் ஒன்று கூடும் அரிய சந்தர்ப்பம். மேற்படி பாடசாலையில் கற்ற — 18 வயதிற்கு மேற்பட்ட — சகலரும் 1994 - 04 - 20 ஆம் திகதிக்கு முன் உங்கள் அங்கத்துவத்தைக் கீழ்க் கண்டவர்களுடன் தொடர்பு கொண்டு உறுதி செய்து கொள்ளுங்கள்.

நன்றி

திரு க. தபேந்திரன், 39/19, செம்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு. இரா. குலசிங்கம் அதிபர் "இறஞ்சித வாசா" கோண்டாவில்

திரு. மு. பாலசுப்பிரமணியம், ஆசிரியர், ஆவடி கோண்டாவில்.

திரு. க. சுந்தரம், J P. கோண்டாவில்

திரு. ப. சிவஞானம், கோண்டாவில்.

திருமதி இ. இராசையா கோண்டாவில்.

திரு. இ. சிவபாதசேகரம் (அதிபர்)

யா/ கோண்டாவில் சி சி த க. பாடசாலை.
1994 - 03 - 25.
[7163]



# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்
# உற்பத்தி எழுச்சி வாரம் - 1994

◎ உற்பத்திக்கு ஒரு விழா
◎ உற்பத்தியாளருக்கு திருவிழா
◎ உற்பத்தித் திறனுக்கு உன்னத பரிசில்கள்
◎ ஆண்டு தோறும் தொடர்வது இவ்வாண்டும் நிகழ்கிறது

காலம்: 1994 சித்திரை 24ஆம் நாள் முதல் 30ஆம் நாள் வரை

### விவசாயம்
1, உழவுப் போட்டி
2, கொத்துதல் போட்டி
(ஆண்/பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்)
3, உபஉணவுப் பயிர்ச்செய்கைப் போட்டி
(அவரையினம்/எண்ணெயினம்)
4, உற்பத்தி எழுச்சி வார பொது அறிவுப்போட்டி
(மாணவர்/உழைப்போர்)

### விலங்கு வேளாண்மை தொழில் போட்டிகள்
1. நல்லினக் காளை
2, நல்லினப் பசு
3, முயல் வளர்ப்பு
4, நல்லினக்கடா
5, நல்லின மறி
6, தாரா வளர்ப்பு

### கைத்தொழில்
1, சிறு கைத்தொழில் போட்டிகள்

### சக்தியைப் பயன்படுத்தல்
2. புதிய கண்டுபிடிப்புக்கள்

### மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

### பனை, தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்
1 நீர் இறைக்கும் பட்டை இழைத்தல்
2, குட்டான் இழைத்தல்
3 கிடுகு பின்னுதல்
4 பனை மரம் ஏறுதல்
5 கூடிய பதநீர் உற்பத்தியாளர் தெரிவுப் போட்டிகள்

### கடல்வளம் தொடர்பான போட்டிகள்
1, நீச்சல் போட்டிகள்
2. பாய் மரம் கட்டுதல்
3 துடுப்பு வலித்தல்
4 வலை பின்னுதல்

### புதிய வகை உணவு அறிமுகப் போட்டிகள்:
கிராமிய பொதுசன அமைப்புகளுக்கிடையிலான போட்டிகள்
1. வீதி திருத்துதல்
2. வாய்க்கால் திருத்தல்
3, குளம் புனரமைப்பு

※ மேற்படி விதிகளையும் விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

● விண்ணப்ப முடிவு திகதி: 15 - 04 - 1994

விண்ணப்பப்படிவங்களை உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடமும், தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட, கோட்ட, வட்டப்பணிமனையிலும் ஒப்படைக்கலாம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7620)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பூங்காவன உற்சவ விஞ்ஞாபனம்

இன்று (28-03-1994) திங்கட்கிழமை நீண்டகால இடைவெளிக்குப்பின் அம்பாள் திருநந்தவனத்தில் கொலு இருக்கும் காட்சி மாலை 6-00 மணியளவில் இடம்பெறும்.

## நிகழ்ச்சிகள்

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| P. ரஜீந்திரன் | P. ரவீந்திரன் |
| R. சிவகுமார் | S. குமாரசுந்தரம் |
| N. மகேந்திரன் | V. சபேசன் |
| S. கண்ணன் | M. முருகானந்தம் |

இசைக் கச்சேரி

வீணை:

செல்வி சத்தியபாமா முத்துக்குமாரு

மிருதங்கம்:

செல்வன் ரதிரூபன்

இன்னிசை நிகழ்ச்சி

இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ்

S. G. சாந்தன் குழுவினரின்

## இன்னிசை வார்ப்புகள்

சிறப்பு நிகழ்ச்சியாக

இசைத்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்ற கலைஞரான ஈழநல்லூர் அருணா இசைக் குழுவினர்

வழங்கும்

## இசைத் தேனமுதம்

இருக்கவியான வைபவத்தைத் தரிசித்து, எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா உபயகாரர்
நல்லூர் சங்கிலியன் மன்றம்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

| | |
|---|---|
| சோபனா | மதுரா |
| ஆடை அகம், | பட்டு மகல், |
| 16, பெரியகடை வீதி, | 75, பெரியகடை, |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம். |

(30113)

# துரத்தப்பட்ட யூதர்களைபோல இலங்கையில் தமிழர்கள்!

## பேராசிரியர் பீற்றர் ஷோக் தெரிவிப்பு

ஸ்டொக்ஹோம், மார்ச் 28

"இலங்கையில் தமிழர்கள் துரத்தப்பட்ட யூதர்களாக இருக்கிறார்கள். தமிழரின் தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு யுத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இதனால் பெரும்பாலான தமிழர்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது."

பேராசிரியர் பீற்றர் ஷோக் சமீபத்தில் சுவீடிஷ் அரசின் குடியகல்வு மற்றும் அகதிகள் விவகார அமைச்சுகளுக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சிங்கள ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் வாழும் தமிழர்கள் இன வன்செயல்களுக்கு ஆளாக வேண்டிய ஆபத்து உள்ளது. இதனால் அவர்கள் மாற்று வழி இல்லாத நிலைவரத்தில் வாழ்கின்றார்கள் — என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்தும் உத்தரவை பலமாகக் கண்டித்துள்ள பேராசிரியர் பீற்றர் ஷோக்,

"இது தொடர்பாக அனுப்பப்பட்டு வரும் ஆட்சேபக் கடிதங்கள் மற்றும் மகஜர்களில் பொதிந்துள்ள உள்ளுணர்வை சுவீடிஷ் குடியகல்வு அமைச்சு தவறாக வியாக்கியானம் செய்கின்றது; இக்கடிதங்களுக்கு உரிய பதிலையும் அமைச்சு அனுப்பவில்லை — என்றும் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை —

Sydasier 1. 1994 என்ற சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் —

"அகதிகளின் மனுக்களை விசாரிக்கும் வெளியார் மேன்முறையீட்டுச் சபைக்கு இலங்கையின் உண்மை நிலைவரம் பற்றி பிழையாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் இச்சபை மிகவும் கண்டிப்புடன் செயல்படுகிறது. பிரபலமான மனித உரிமை அமைப்புக்களிடம் இருந்து படிக்கவும் இச்சபை மறுத்துவருவது இன்னும் மோசமாக உள்ளது" — என்றும் பேராசிரியர் பீற்றர் ஷோக் தெரிவித்திருக்கிறார்.

(த-எ)

# தேர்தல்களில் இம்முறை வெளியார் தலையீடு இல்லை

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

தென் மாகாணசபைத் தேர்தல் பெரும் பிரச்சினைகள் ஏதும் இன்றி அமைதியாக நடந்து முடிந்தது என்றும் —

வாக்களிப்பு பாதுகாப்பாக நடைபெற பொலீஸார் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

பொலீஸார் வழங்கிய ஒத்துழைப்புக்காக பொலீஸ் மா அதிபருக்கு தமது நன்றியையும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1988 இல் தென்மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலையங்களில் வெளியார் தலையீடு இருந்தது என்றும் —

அதன்பின்னர் நடந்த தேர்தல்களில் வெளியார் தலையீடுகள் நீடித்தன என்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை 14 ஆயிரம் தேர்தல் ஊழியர்கள் ஒன்பது மணி நேரப் பணியை செவ்வனே செய்ய பாதுகாப்பு ஒழுங்குகள் சீராக வழங்கப்பட்டன என்றும் —

இத்தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடிக்க ஒத்துழைத்த அனைவருக்கும் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-ஏ)

# நீரிறைக்கும் இயந்திரங்கள் விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களுக்கு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதன்படி றொபின் ஈ வை — 20 — 22,175 ரூபாவாகவும், றொபின் ஈ. வை 15 — 19,170 ரூபாவாகவும், குபோட்டா கே. எச் 200 — 21,975 ரூபாவாகவும், என் பிஸ்ட் என். கே 12 — 14,000 ரூபாவாகவும் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் தெரிவித்துள்ளது.

(இ-17)

# மாவீரர் சோலை மரநடுகை 28 ஏக்கரில் அமுலாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த மூன்று ஆண்டுகளாக வன்னியில் இருந்து மரங்கொண்டு வருவது தடை செய்யப்பட்டபடியால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயன்தரு மரங்களையும் பற்றைக் காடுகளையும் விறகுக்காக வெட்டும் ஒரு நிலைமை தோன்றியுள்ளது. இதனால் தமிழீழத்துக்குப் பெரும் கெடுதி ஏற்படும். இதனைக் கருத்திற் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மர நடுகைத் திட்டம் ஒன்றை கடந்த ஆண்டு அமுல்படுத்தியது. இவ்வாண்டு 18 ஏக்கரில் அமுல்படுத்தவுள்ளது.

நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்று இவ்வாறு கூறுகின்றது. அது மேலும் கூறுவதாவது:

இத்திட்டம் மண்ணின் விடுதலைக்காக தமது உடல்களை வித்தாக்கிய மாவீரர்களின் ஞாபகார்த்தமாக பயன்தரு மரங்களை நாட்டல் என்னும் முறையில் மாவீரர் சோலை என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் தாய் திருநாடாம் தமிழீழ மண்ணிலே தம் உயிர்களை வித்தாக்கிய இந்த மாவீரர் நினைவாக யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிக் கோட்டத்தில் கெற்பலி என்னும் கிராமத்தில் நிக்கஸ் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது தான் இந்த மாவீரர் சோலை.

மண்ணுக்கு தன்னுயிரை வித்தாக்கிய வித்துகளின் சோலை இருபத்தியெட்டு ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டது.

இச் சோலையிலே பலவிதமான பயன்தரும் பல இன வித்துக்கள் 1993 செப்டெம்பரில் பத்து ஏக்கரின் நடுகை செய்யப்பட்டுள்ளது. இங்கு நாட்டப்பட்டுள்ள கன்றுகளாக சவுக்கு, வேம்பு, மகோகனி, வாகை, சமண்டலை, இலவம், தென்னை, போன்றன மாவீரர்களின் நினைவாக சின்னங்களாக நடப்பட்டுள்ளன.

மேற்படி திருவனம்மாரநடுகைத் திட்டத்தை வடமராட்சிரோய் வெளியிலும், தென்மராட்சி தம்பசாமத்திலும் விஸ்தரிப்பதுடன் ஏனைய இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(க)

## இலவச வைத்திய பரிசோதனை

சாவகச்சேரி ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையம் வடபிராந்திய ஸ்ரீசத்தியசாயிசேவா நிலையங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலவச வைத்திய பரிசோதனைகள் ... வரும் 3ஆம் திகதியும் 17 ஆம் திகதியும் நடைபெறும்.

# ஓராண்டுத் திதியின் நினைவாக



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 | 10 |
| — | — |
| 12 | 03 |
| — | — |
| 1926 | 1993 |

## அமரர் கி. இரத்தினகோபால்

(ஓய்வுபெற்ற அதிபர், புங்குடுதீவு - 5)

'குருவருள் தொண்டார்க்கு திருவருள் துணை நிற்கும்'

புங்கை நகரினிலே ஆத்மீக நாதத்துடன்
குருமூர்த்தி சாஸ்திரியார் பேரனாக வந்துதித்தார்
மாயவர் கிருஷ்ணபிள்ளை மாதா பராசத்தியம்மா
மகிழ்வூட்டி மகிழ்ந்த செல்வர்
மானிலத்தில் ஒரு குறையும் இல்லாது வாழ்ந்த -
தேசிகராம்
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
அஞ்சாத நெஞ்சமும் ஆத்மீக அறிவும்
சுடுவது போற் சொல்லும் அபோனாப் பணிவும்
நல்ல பண்பும்
முகமன் சொல்வாரிலே மோகமுமின்றி
தானான தானேயல்லால் தனக்குதவி பாருமில்லை
எல்லா உயிரையும் சிவனெனக்கண்டு
சிந்தை கலங்காது நல்வழி நின்று
அல்லல் அறுத்து ஆனந்தம் பெற்றார்.

எங்கள் ஐயாவின் ஓராண்டுத் திதியின் நினைவாக அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள் (U. S. A.),
மருமக்கள், பேரப்பிள்ளைகள் (U. S. A.),
சம்பந்தி கதிரவேற்பிள்ளை குடும்பத்தினர்,
அன்புடன் வளர்த்த பெறாமகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

12 A, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்.

(30109)

# 6 ஆம் மாத நினைவலைகள்

## அமரர் சின்னத்தம்பி சிவகுருநாதன்

(இளைப்பாறிய உ. அ. அதிபர், நல்லூர் சமாதான நீதிவான்)

ஆறாத துயரமதை
மாறாத சொத்தாக்கி
மீளாத இடத்துக்குச்
சென்றுவிட்ட செம்மலே!
நிகழ்வுகளே நினைவுகளாய்
நிதமும் நாம் உருகுகின்றோம்
ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்

91/7, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(30103)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 | 26 |
| — | — |
| 11 | 02 |
| — | — |
| 1902 | 1994 |

## பொன்னம்பலம் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற, மலேசிய வைத்திய கலாநிதி)

26-2-94 இல் காலமான திரு பொ. மயில்வாகனம் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகளும் மற்றும் நிகழ்வுகளும் இன்று (28-3-94) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(30161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹொண்டா ஊர்தி மோட்டார் சைக்கிள் C-D 125 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. சபாரத்தின தேசிகர், தம்புசெட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (30086)

### தேவை

அச்சுக்கோப்பாளர் தேவை. இருபாலாரும் நேரில் வந்து சந்திக்கலாம். தானியங்கி மெஷின் மைண்டரும் தேவை. 37, கே. கே. எஸ் வீதி, கன்னாகம்.

(7089)

### டாக்டர்கள் தேவை

M. B B. S., R. M. P., A. M. P. தரத்திலுள்ள டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொதுஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை. 1-4-94 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி: வில்லியம் ஹாவே, தனியார் மருத்துவமனை, இல 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(30003)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடன் கிடைக்கும். த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி)

(30053)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து இன்றும் நாளையும் எதிர்வரும் வியாழக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயர் யாழ். திரும்பினார்

வடமராட்சி, மார்ச் 28

இவ்வாலை மற்றும் தீவுப் பகுதிகளுக்கு ஒரு வார கால விஜயம் மேற்கொண்டிருந்த யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பினார்.

(இ-5-173)

# திருநெல்வேலி சிவன் கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக கால
# தொடர் விரிவுரைகள்

27-03-94 இல் சிறப்பு சொற்பொழிவு:- கம்பவாரிதி இ. ஜெயராஜ் (அ. இ. க. க.)

27-03-94 முதல் 10-4-94 வரை [15 தினங்கள்]
தினசரி இரவு 7 மணி முதல் 8 மணிவரை
கந்தபுராணம்
நிகழ்த்துபவர்:- 'கந்த நிதி' த. சிவகுமாரன் [அமைப்பாளர் காரை கம்பன் கழகம்]

11-4-94 முதல் 25-4-94 வரை [15 தினங்கள்]
தினசரி இரவு 7 மணிமுதல் 8 மணிவரை
திருவிளையாடல் புராணம்
நிகழ்த்துபவர்:-
'சிவனருட் செல்வன்" ஆறு. திருமுருகன் B.A [ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி]

26-4-94 முதல் 11-5-94 வரை [16 தினங்கள்]
தினசரி இரவு 7 மணி முதல் 8 மணிவரை
மகா பாரதம்
நிகழ்த்துபவர்:- கம்பவாரிதி இ. ஜெயராஜ் [அமைப்பாளர் அ. இ. கம்பன் கழகம்]

சிவனடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தேவஸ்தானம்
திருநெல்வேலி சிவன் கோவில்
திருநெல்வேலி.

விளம்பர அன்பளிப்பு:-
எஸ். சதுர்ராமன்
**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
திருநெல்வேலி

(சி-7612)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 - 08 - 1971
உதிர்வு: 28 - 03 - 1991

## வேலாயுதம் ஜெயகாந்தன்

ஆண்டு பல சென்றாலும் அழியாதுன் நினைவலைகள்
மீண்டுவரும் பிறவியிலும் உன்னுடன் உறவாட
ஆண்டவனை வேண்டுகிறோம் எம்அருமைக்கண்ணா!
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அப்பா அம்மா, அக்கா, தம்பி
மற்றும் உறவினர்கள்

56, கே. கே. எஸ். றோட்,
கொக்குவில். [30041]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 22 - 10 - 1970
இறப்பு: 24 - 12 - 1994

## திருமதி சசிகலா சுதாகர் (சசி)

(கன்னாகம் கிழக்கு)

திதி: 28 - 03 - 1994

எத்தனை சோதனை எத்தனை வேதனை
இத்தனை சாதனை ஏன் உந்தன் வாழ்வில்
சசிகலா பெற்றுவிட்டாய் என்ன?
விதியின் விளையாட்டோ வினையோ இல்லை
சதிதானோ என்றும் தணியாத துயரத்தில்
உதிரமே கண்ணீராய்ச் சிந்துகின்றோம் இங்கே?
அன்னம் மாவோ அருமைத்தாயார்
அன்புத்தந்தை கணபதிப்பிள்ளையைக்
கருவிலே தறந்தாய் அன்புத்துணைவனைப்
பாதியில் விட்டாய் உடன்பிறப்புக்களை
உடனே விட்டாய் சடுதியால் மரணம்
உன்னைத் தழுவிக் கொண்டதே
உயிர்மட்டும் பிரிந்தது என்றால்
உருவம் எம் கண்ணுக்குள் நிற்குதையோ
பருவம் வராமலே வாழ்வு பழுத்துவிட்டதோ
உருகும் எம்முள்ளம் உருக்கும் கண்ணீரை.
இளமைக் கல்வியை ஏழாலை அமெரிக்கன்
மிஷனில் கற்றுத் தொடர்ந்து தெல்லி
யூனியன் கல்லூரியில் மேல்வகுப்பு வரை கற்று
எஸ் என் ஆர் ஆசிரியர் அன்பு மாணவியாய்
அடக்கமும் அன்பும் பணிவும் உடையாய்.
உடன் பிறப்பான அண்ணன்மாரோ
சுரேஸ்குமார், சதீஸ்குமார், ரமேஸ்குமாருடன்
அக்கா சூரியகலாவும் வெளிநாட்டில் இருந்துவிட
உடன்பிறவாச் சகோதரிகள், சோதரர்களின்
அன்பிலும் அத்தான்மார் மச்சான்மார் ஆதரவிலும்
மாமன், மாமிமார், பெரியதந்தை பெரியதாயார்
சீனியம்மா, சீனியப்பா, குஞ்சியம்மா, குஞ்சியையா
அரவணைப்பிலும் துன்பம் மறியாது இன்பமாய் -
வளர்ந்தவளே!
வளமான வாழ்வுக்கு வழிதேடி இந்தியா
ஜேர்மன், மொஸ்கோ வரைசென்று
மைத்துனர் சுதாகரைக் கொழும்பில் மணமுடித்து
அன்புடன் வாழ்ந்தாய் பண்புடன் வாழ்ந்தாய்
ஏன் உன்வாழ்வு பாதியில் நின்றது?
ஏன் உன் வாழ்வு மரை மறுத்தது?
திருமணமாகி ஆண்டுகள் இரண்டே சென்றன
திருமணக் கோலம் கண்ணுக்குள் நிற்குதே!
எம் அன்புக் குரிவவளே சசிகலாவே
உள்ளம் தடுமாறுகின்றோம் துன்பத்தில்
உயிர் ஊசலாடுகின்றோம் துயரத்தால்
உதிரமாய்க் கண்ணீரை உருக்குகின்றோம்
உன்பிரிவை ஆற்றமாட்டோம்
உன்பிரிவால் உற்றார் உறவினர் தடுமாறுகின்றனர்.

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புக்குரிய:
சோமசுந்தரம் நாகம்மா,
சுசிலா பாஸ்கரன்,

சந்தையா வீதி,
கன்னாகம் கிழக்கு (7042)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் குலசிங்கம் ராஜ்குமார்

(Union Trust and Investments Ltd, Jaffna)

மலர்வு: 09 - 02 - 1964
உதிர்வு: 28 - 03 - 1989

நினையாத நேரம் அணைந்த குலவிளக்கே!
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
ஆறிடுமோ தம்பி எம் உள்ளம்
எந்நாளும் உங்கள் நினைவாலே -
உருகுதே எங்கள் மனம்.

அப்பா, அம்மா, அத்தான்,
தங்கை, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கைலாசம் வீதி,
கட்டுவன்,
தெல்லிப்பழை. (7160)


# PRIMA - பிறிமா

## கால்நடை விவசாயிகளுக்கோர் அன்பான வேண்டுகோள்

நீங்கள் மாதாந்தம் பாவிக்கும் அல்லது தேவைப்படும்
பிறிமா கோழித்தீன், பிறிமா மாட்டுத்தீன்
மற்றும்
பிறிமாவின் கால்நடை உணவுகள்,
பிறிம கோழிக் குஞ்சுகள் (புரோயிலர் லேயர்)

பற்றிய புள்ளி விவரம் ஒன்றை திரட்டுவதற்காக பிறிமாவின் யாழ். மாவட்ட முகவராகிய நாம் இன்று தொடக்கம் ஏப்ரல் 8ஆம் திகதி வரையும் ஈடுபட்டுள்ளோம்.

நேரடியாக ஒவ்வொருவரையும் சந்திக்க முடியாத இக்கால கட்டத்தில் பத்திரிகை வாயிலான விளம்பரம் மூலம் உங்களைச் சந்திக்கின்றோம். தயவு செய்து நீங்கள் பாவிக்கும் அல்லது தேவைப்படும் பிறிமா கால்நடை உணவு வர்க்கங்கள் பற்றியும் பிறிமாவின் கோழிக் குஞ்சுகள் பற்றியும் (புரோயிலர் லேயர்) நேரடியாகவோ அல்லது தபால் அட்டை மூலமாகவோ தயவு செய்து எமக்கு அறிவியுங்கள்.

இது யாழ். மாவட்ட தேவைகளை தீர்மானிக்க தட்டுப்பாடு இன்றி விநியோகிக்க எமக்கு உதவியாக இருக்கும்.

அலுவலகம்;

**மாலவன் வர்த்தக நிலையம்**
**MALAVAN TRADE CENTRE**
138, மானிப்பாய் வீதி,
138, Manipay Road,
யாழ்ப்பாணம்.
Jaffna.

**AUTHORIZED DEALERS FOR**
**CEYLON GRAIN ELEVATORS LIMITED**
(PRIMA FEEDS & CHICK)
JAFFNA DISTRICT

பிறிமாவின் அங்கீகரிக்கப்பட்ட யாழ் மாவட்ட முகவர் எம்மிடம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு நேரடி விநியோகம் [illegible] செய்யப்படும்.

(30410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிக்காவின் நாடி பிடித்தல்

தென்னிலங்கையில் உருவாகியிருக்கும் அரசியல் திருப்பத்தின் விளைவாக, இவ்வருடம் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (அல்லது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி) வேட்பாளராக சந்திரிகாவே நிறுத்தப்படுவார் என்பது நிச்சயம். தென்னிலங்கையில் மார்ச் 24ஆம் திகதி மலர்ந்த புதிய அரசியல் எழுச்சி நீடிக்கும் பட்சத்தில் சந்திரிகாவே ஜனாதிபதியாக அமர்வார் என்பதும் சந்தேகமில்லாத ஒன்று.

ஆகையால் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக அவர் இப்போதும், இனிமேலும் தெரிவிக்கும் கருத்துக்கள் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டியவை; பொருட்படுத்தப்படவேண்டியவை.

நாம் ஆட்சிக்கு வந்தால், வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் செய்வோம். தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களைத் தருவோம் — என்று அவர் கூறியிருப்பது நோக்கற்பாலது.

பதவிக்கு வருவதற்கு முன்னர் கூறியதை, பதவிக்கு வந்ததும் மறந்து விடுவது தான் ஸ்ரீலங்காவின் அரசியல்வாதிகளின் ''சிறப்பு''க் குணாம்சம். ஏன்? தமிழர் விவகாரம் குறித்து ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்ட பின்னர், தமக்கு வரும் அழுத்தங்களை எதிர்கொள்ளத் திராணியற்றவர்களாக அவற்றைக் கிழித்தெறிவதும் அவர்களுக்கு கைவந்த கலையே!

ஆனால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இனிமேல் சிங்கள மக்கள் மீது குதிரை விடுவது கஷ்டமாகி வருகிறது. மக்களைத் தூண்டி இனத்துவேசத்தை விதைத்துத் தங்கள் அரசியல் சுயலாபங்களை ஈட்டுவதும் மிகக் கடினமாகவே இருக்கும்.

வடக்கு - கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல அங்கு இனப்பிரச்சினையே உண்டு என்பதை தென்மாகாண சபைத் தேர்தல் முலம் சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே.

ஆனால் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு இருக்க வேண்டும்; தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் எந்தளவுக்கு நியாயமாக இருக்க வேண்டும்; எந்த அடிப்படையில் நின்று பிரச்சினையை அணுகுவது; என்பன குறித்து சிங்கள மக்கள்— வாக்காளர்கள்— நேரடியாகக் கருத்துத் தெரிவிக்கப்போவதில்லை.

அரசியல் தலைவர்களே— கட்சிகளே— பிரச்சினைக்கான தீர்வையும், திட்டங்களையும் வகுத்து மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் செய்யத் தவறியதைத் தாம் செய்யப் போவதாகச் சந்திரிகா கூறுகிறார்.

தமிழர் பிரச்சினை வளர்வதற்கு சுதந்திரக் கட்சியின் பங்கு குறைவானது அல்ல என்பதைத் தமிழர்கள் மறக்க மாட்டார்கள்.

இவர் இளம் தலைமுறைத் தலைவர். துடிப்பானவர். அதனால் புதிதாகவும் புரட்சிகரமாகவும் சிந்திக்கக் கூடும். தமது தந்தையும் தாயும் தமிழர்களுக்குச் செய்த துரோகங்களுக்கு தான் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று கூட எண்ணலாம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதால் தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டிருப்பதை சந்திரிகா உணர்ந்திருப்பார். இனப்பிரச்சினையை மேலும் நீடிக்கவிட்டால், நாட்டுக்குக் கேடு உண்டாகும் என்பதனையும் அவர் புரிந்திருக்கலாம். மறுபக்கமாக, தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் தாம் நியாயமாக நடந்து கொள்ளப் போவதாகக் காட்டவும் முனையலாம். அதற்கான நாடி பிடித்தலாகவும் இருக்கலாம்.

எப்படியோ, தமிழர்களும் அவரின் கையைப் பலப்படுத்தி, தங்களுக்கு உதவுவாரா என்பதனை மிகுந்த ராஜதந்திரத்துடன் நாடி பிடித்துப் பார்ப்பதால் நட்டம் எதுவும் ஏற்படாது.

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (த-90)

★ ★ ★

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இன்று காலை 10-30 மணிக்கு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் இருந்து எடுத்து வரப்பட்ட நடராஜப் பெருமானின் சிலை பிரதிட்டை செய்யப்படும். (த-30)

★ ★ ★

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்

★ ★ ★

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகாகணபதிப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோலத்திருவிழா இன்று திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறும். மாலை விசேட பூஜை ஆராதனைகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமானின் திருவுலாக் காட்சி இடம்பெறும். [த]

★ ★ ★

நல்லூர் பாணன்குளம் அருள்மிகு நாச்சியம்பாள் கோயில் தேர்த்திருவிழா இன்று திங்கள் காலை 9 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்த உற்சவம் இடம்பெறும். [த-111)

## இன்று

சந்திரா தனபாலசிங்கத்தின் ''சில மனிதர்கள்'' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா இன்று திங்கள் மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். [த]

★ ★ ★

மாடு வளர்ப்போருக்கான ஒரு வாரகால இலவச பயிற்சி வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை முதல் பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தியில் அமைந்துள்ள யாழ் அரசினர் கால்நடை வைத்தியசாலையில் நடைபெறும். [த-162]

## கல்விக் கழக ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

கல்விக்கழக ஆசிரியர்களாக நியமனம் பெற்ற யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மகளிர் கல்லூரியில் சமூகமளிக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு சி. புவேந்திரன் கேட்டுள்ளார். [த]

## நாளை

காரைக்கால் அம்மையாரின் குருபூசை வழிபாடும், பூந்துருத்தி காடநம்பியின் நினைவுப் பேருரையும் நாளை செவ்வாய் காலை 9 மணி முதல் யாழ். இந்து மைதானச் சந்தி மெய்கண்டதேவர் ஆதீனத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

மருதனார் மடம் கிறீஸ்த சேவா ஆச்சிரமத்தைத் தோற்றுவித்த வண. சேவகர் எஸ். செல்வரத்தினம் அடிகளாரின் நினைவை ஒட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நற்கருணை ஆராதனை நடைபெறும் (உ-162)

# இ. தொ. கா. குடும்பச் சொத்தல்ல
# தொண்டாவின் பேரன் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

''இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு குடும்பச் சொத்தல்ல. அமைச்சர் தொண்டமான் தமது பேரனைத் தலைமைப் பதவிக்கு வளர்த்து வருவதாக செல்லச்சாமி கூறிவருகிறார்.

''இந்தச் செல்லச்சாமி எத்தகையவர்?

''மேல்மாகாண சபைக்கு அண்மையில் நடந்த தேர்தலில் தனது மகனைப் போட்டியிடவிடாது, தனது இரண்டாவது மனைவியைப் போட்டியிட வைத்தவர்தான் செல்லச்சாமி.''

அமைச்சர் தொண்டமானின் 29 வயதுப் பேரனான திரு. ஆறுமுகம் தொண்டமான் இவ்வாறு ''சண்டே லைம்ஸ்''க்கு அளித்த பேட்டி ஒன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட செல்லச்சாமியின் மகன், இப்போது எம்முடன் உள்ளார். செல்லச்சாமியின் குடும்பத்தில் பெண் சொல்வதுதான் நடக்கிறது. எமது குடும்பம் குடும்பத் தலைவரின் சொற்படிதான் நடக்கிறது என்றும் ஆறுமுகம் தொண்டமான் கூறினார். (க-எ)

# அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்துக்கு எதிரான போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, மார்ச். 28

''புத்தளம் இரணவிலவில் அமெரிக்கா அமைத்து வரும் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' (வி ஓ ஏ) ஒலிபரப்பு நிலையம் அந்த இடத்தில் இருந்து அகற்றப்படும் வரை இரணவில மக்கள் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் போராட்டம் தொடரும்''

''செடக் நிறுவனத்தைச் சேர்ந்த வண. பிதா ஒஸ்வால்ட் போர்த் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமய சமூக நடுநிலையத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அறிவித்த வண. பிதா ஒஸ்வால்ட் போர்த் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்திற்கு எதிரான கண்டனம், எதிர்ப்புகள் ஓய்ந்துவிடவில்லை. அந்த நிலையத்தை அங்கிருந்து அகற்றி அப்பகுதி மக்களுக்கு அமைதி கிட்டும் வரை போராட்டம் தொடரும்.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா தொடர்பாக இலங்கை அரசு அமெரிக்க அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை.

உண்மைப் பத்திரம் என்ற தலைப்பில் அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட பத்திரத்திலும் கூட உண்மை இல்லை. எனவே வானொலி நிலையம் தொடர்பான உடன்படிக்கையின் உண்மைகளை 'இரண கேட் மோசடி' என்னும் தலைப்பில் புதிய நூலாக வெளியிட்டுள்ளோம்.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தை இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு முற்பகுதியில் செயல்பட வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஒலிபரப்பு நிலையம் அமெரிக்காவின் அரசியல், பாதுகாப்பு விடயங்களுக்கு பயன்படுத்தப்படும். இலங்கை உட்பட அதன் அண்டை நாடுகளில் அரசியல் சீர்குலைவுகளை ஏற்படுத்த பயன்படுத்தப்படும்.

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் பாதுகாப்பு தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒலிபரப்பு நிலையம் அமைப்பதற்கென அப்பகுதியில் சுமார் எட்டாயிரம் தென்னை மரங்கள் வெட்டப்பட்டன. இதனால் இலங்கையின் பொருளாதாரம், அற்றாடல் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவிற்கு இலங்கையில் ஒலிபரப்பு நிலையத்தை அமைக்க அனுமதி வழங்கியதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையும் அணுவாயுதத் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய ஆபத்து உண்டு.

— இவ்வாறு வண பிதா ஒஸ்வால்ட் போர்த் பத்திரிகையாளர்களிடம் மேலும் தெரிவித்தார்.

சிலாபம் மறை மாவட்ட ஆயர் வண. பிராங் மார்கஸ் பெர்னாண்டோ உட்பட இரணவில பொதுமக்கள் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் பிரமுகர்கள் பலரும் அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (க-5)

# தெற்கு பல்கலைகழகங்களில் தமிழர்கள் சேர எதிர்ப்பு

''தமிழ் மாணவர்கள் தென்பகுதி பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுவது சட்டவிரோத செயலாகும். இதனால் சிங்கள மாணவரின் இடவசதி பாதிக்கப்படும்; தென்பகுதி மாணவர்களுக்கான சந்தர்ப்பம் வடபகுதியினரால் பறித்துக் கொள்ளப்பட நேரும்.''

சிங்களப் பெற்றோர் இவ்வாறு ஆட்சேபனை தெரிவித்து பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு முறையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக வைத்திய பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட 19 தமிழ் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்குச் செல்ல மறுத்து கொழும்பு அல்லது யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் தமது கல்வியைக் கற்க பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்ததை ஒட்டியே சிங்களப் பெற்றோர் இவ்வாறு சீற்றம் அடைந்துள்ளனர். (க)

# வவுனியா விவசாய கல்லூரி திணைக்கள பொறுப்பில்

வவுனியா விவசாயக் கல்லூரி மத்திய அரசாங்கத்தின் விவசாயத் திணைக்களத்தின் நேரடி பொறுப்பில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதுவரை காலமும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பொறுப்பில் இயங்கிவந்த இந்தக் கல்லூரியை அரசு பொறுப்பேற்றுள்ளது என்று—

பேராதனை விவசாயக் கல்லூரி துணை அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. நாகதாசன் இக்கல்லூரிக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

புதிய கற்கை நெறிகள் இன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

# தமிழர் கலாசாரத்துடன் இந்து மதத்தை யாழ். பல்கலைக்கழகம் பேணுகின்றது

## வரலாற்றுத்துறைத் தலைவர் கூறுகிறார்

வலிகாமம் தெற்கு, மார்ச் 28

''பௌத்த மதத்தையும் சிங்கள கலாசாரத்தையும் பல பல்கலைக்கழகங்கள் பாதுகாத்து வருகின்றன. தமிழர் கலாசாரத்தையும் இந்து மதத்தையும் பேணிப் பாதுகாக்க ஒரேயொரு பல்கலைக்கழகம் மட்டுமே உண்டு. அந்த வகையில் யாழ் பல்கலைக்கழகம் பல ஆண்டுகளாக தனது கடமையை ஒழுங்காகச் செய்து வருகிறது''

இராமநாதன் கல்லூரியில் குரும்பசிட்டி சன்மார்க்கசபை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இரண்டு நாட்கள் நடத்திய சைவ சமயப் பெருவிழாவில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் கருத்துரை வழங்குகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் வி சிவசாமி தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் விழாவில் கலாநிதி சி. க. சிற்றம்பலம் மேலும் கூறியதாவது.

தமிழ் இனத்தின் விடுதலைக்கும், தனித்துவத்துக்குமாக போராட்டம் நடைபெறும் இக்காலத்தில் அதன் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பதில் பல்கலைக்கழகம் பெரும் பணியாற்றுகின்றது.

பௌத்த வரலாற்று நூல்களைப் பேணும் மரபு இருந்தது போல இந்து மதத்தில் நூல்கள் பேணப்படவில்லை

கற்சிலைகளில் வரலாறுகளை எழுதுவதற்கு வாய்ப்பாக சிங்கள பிரதேசத்தில் கருங்கற்பாறைகள் இருந்தது போல வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருக்கவில்லை

கலை வளர்த்த இடங்களாக விளங்கியவை கோயில்கள். இந்துக் கோவில்களை யெல்லாம் அந்நியர்கள் (போர்த்துக்கீசர்) அழித்தமையால் பல கலைச் செல்வங்கள் அழிந்து விட்டன.

ஆரம்ப காலங்களில் இந்துக்கள் தமது கலைகளை கருங்கல்லில் வடிக்கும் நிலை இருக்கவில்லை. கருங்கற்கள் நடுகைக் கற்களாக பயன்படுத்தப்பட்டமையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது

இக்காரணங்களால் தமிழர் கலைகளும், இந்துக் கலாசாரங்களும் பேணப்படாது போய்விட்டன.

ஆனால் இவற்றை காரணமாகக்காட்டி இந்து - கலை - கலாசாரங்கள் இங்கு இருக்கவில்லை எனக்கூற முடியாது.

சிங்கள கல்வெட்டுக்கள், சிவன், முருகன், பிள்ளையார், காளி போன்ற தெய்வ வழிபாடுகள், சிங்கள ஆலயங்கள், இலக்கியங்களில் எல்லாம் இந்துமதம் பற்றிக் கூறப்பட்டுள்ளது — இப்படி அவர் கூறினார். (த-152)

# ஆசிரியர் கல்லூரிகள் இணைப்பு யாழ். கல்வி வளத்தை குறைக்கும்

## கல்வியூட்டுவோர் சங்கம் ஆட்சேபனை

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியையும் பலாலி ஆசிரியர் கல்லூரியையும் ஒன்றிணைப்பதால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பாடநெறிகளைக் கற்கும் வசதிகளைப் பெரிதும் குறைக்கும்.

அத்துடன் எமது பிரதேசத்தில் கல்வி வளங்களைக் குறைப்பதாகவும் அமையும்.

கல்வியூட்டுவோர் சங்கம், கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள ஆட்சேபனைக் கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

★ மேற்படி இரண்டு ஆசிரியர் பாடசாலைகளும் வேறுபட்ட பாடநெறிகளைப் போதிக்கின்றன.

★ இப்பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் ஆசிரியர் — பயிற்சியாளர்களின் எண்ணிக்கை சூழ்நிலைகளுக்கு ஏற்பக் குறைகின்றது. கடந்த காலத்தில் இப்படி நடந்திருக்கிறது. இணைப்பு தேவை என்று நாம் கருதவில்லை.

★ யாழ் மாவட்டத்தில் முன்னர் ஐந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இருந்தன. பின் அவை இரண்டாகின. இதையும் குறைத்தால் இப்பிரதேசத்தின் கல்வி வளங்கள் குறைக்கப்படும்.

★ பயிற்றப்பட்ட ஆசிரியர்களைப் பயிற்றுவித்து [illegible] நிறு போதனை [illegible] ஆகியவற்றின் தேவையை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனைக் கமிட்டியின் (1993) புதிய கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கின்றன. இந்த ஆசிரியர் கல்லூரிகளை இந்த நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

★ யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மையப் பிரதேசத்தில் கல்விக் கல்லூரி ஒன்றை ஸ்தாபிப்பது தேவையாக இருக்கிறது. இந்த ஆசிரியர் கல்லூரிகளில் ஒன்றை விஸ்தரித்துக் கல்விக் கல்லூரியாகவும் பயன்படுத்த முடியும். தெற்கிலும் கிழக்கிலும் சில ஆசிரியர் கல்லூரிகள் [illegible] இவ்வாறு கூறுகின்றன [illegible]

# பத்து ஆண்டு காலத்துக்குள் மாலைதீவு கடலில் மூழ்கும்!

## அந்நாட்டு ஜனாதிபதி கவலை

கொழும்பு, மார்ச். 28

''கடல் தொடர்ந்தும் கொந்தளிக்குமானால் மாலைதீவு தொடர்ந்தும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை''

—இவ்வாறு கூறியிருக்கிறார் அந்நாட்டு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம்.

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்தவர் அங்குவைத்து இத்தகவலை வெளியிட்டார்.

1,192 தீவுகளைக் கொண்ட மாலைதீவில் இரண்டு லட்சம் மக்கள்வாழ்கிறார்கள். அங்குள்ள 201 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள். இந்த தீவுகளில் அனேகமானவை கடல் மட்டத்திலிருந்து சில அடிகளே உயரமுடையவை.

தமது நாடு குறித்து ஜனாதிபதி கையூம் மேலும் தெரிவித்ததாவது:-

''இந்து சமுத்திரத்தில் கடல்நீர் உயர்ந்து வருவதாலும், துரிதமாக மண்ணரிப்பு ஏற்படுவதாலும் தாழ் நிலப்பகுதியைக் கொண்ட மாலைதீவு தொடர்ந்து இருக்குமா என்று சூழலியலாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஐம்பது முதல் நூறு வருடங்கள் வரையே எமது நாடு தப்பிப் பிழைக்கும் என நம்புகிறோம்.

கடல் மண்ணரிப்பினால் பெரும் பாதிப்புக்கு இலக்காகியுள்ள தாழ் நிலத் தீவுகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்களை வேறு இடங்களுக்கு மாற்றும் வேலைகள் கடந்த டிசம்பரிலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டது—என்றார். (உ)

# 587 தபால் பொதிகள் வந்தன இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச். 28

வாதுவ கப்பலில் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்ட 587 தபால் பொதிகளும் நேற்று இரவு யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இவை இன்று திங்கட்கிழமை முதல் தரம்பிரிக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம் முறை வந்த தபால் பொதிகளில் குறைந்த எண்ணிக்கையான கடிதங்களே உடைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-162)

# வெருகலில் மோதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் வெருகல் பகுதியில் உள்ள கல்லிரவு காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

சுமார் 35 நிமிடங்கள் நீடித்த இத் தாக்குதலில் விசேட அதிரடிப்படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

கல்லிரவு காட்டுப்பகுதியால் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்த முற்பட்ட வேளையிலேயே விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலையடுத்து படையினர் பின்வாங்கி சென்றனர்.

லெப்டினன்ட் சோமேஸ் அல்லது அறிவாளி (பாக்கியராசா விஜயகுமார் — திருகோணமலை) என்ற போராளி இம் மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

# மட்டக்களப்புக்கு அமெரிக்கக் குழு!

யாழ்ப்பாணம், மார்ச். 28

அமெரிக்க தூதுவர் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று அடுத்தமாதம் முற்பகுதியில் மட்டக்களப்புக்கு வரவிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்க தூதுவர் சகரி தலைமையில் வரும் இக் குழுவில் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி ராஜாங்க செயலாளர் றொபின் ராபேல், அமெரிக்க தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் பிரட் டேற்றல் ஆகியோர் அடங்குகின்றனர்.

இக்குழுவினர் எதிர்வரும் 8 ஆம் திகதி மட்டக்களப்பை வந்தடைவர் என்றும்—

அங்குள்ள நிலைமைகளை நேரடியாக கண்டறிவதே இக் குழுவின் விஜயத்தின் முக்கிய நோக்கமென்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—நோறாட் நிறுவனத்தின் குழு ஒன்று 30 ஆம் திகதி மட்டக்களப்புக்கு வரவிருக்கிறது. [உ-3]

# பழுகாமம் தாக்குதலில் 15 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு பழுகாமத்தில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 15 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பழுகாமத்தை சுற்றி வளைத்த அதிரடிப் படையினர் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி தாக்கியதாகவும்—

கை, கால், எலும்புகள் சிதைவடைந்த நிலையில் 15 பொதுமக்கள் மட்டக்களப்பு, வைவாஞ்சி குடா ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# தேர்தல் ஆணையாளருக்கு சிறிமாவோ புகழாரம்!

கொழும்பு, மார்ச் 28

தென் மாகாணத் தேர்தலை நியாயமான முறையிலும் உயர்ந்த தரத்திலும் நடாத்தியமைக்காக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நன்றி வெளியிட்டிருக்கிறார்.

தேர்தல் வெற்றி குறித்து ''லங்காதீப'' சிங்கள இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் தேர்தல் ஆணையாளரைப் புகழ்ந்தார்.

வீரத்துடன், அச்சமின்றி, கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும், அரசுக்கு அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்த தென் பகுதி மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

வீட்டினைச் சுற்றி தோட்டங்கள் தழைக்க
நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தீர்வை நாட வலியுறுத்துகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 28
"வடக்கு — கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றே காணப்படவேண்டும். போருக்கு முடிவு கண்டு, சாத்தியமான எல்லா வழிகளிலும் சமாதானத்துக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்"

வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடந்த பரிசளிப்பு விழா ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

கடந்த பத்தாண்டுகாலமாக நடக்கும் போரினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. 40 ஆண்டுகளாக யுத்தம் புரிந்து வந்த இஸ்ரேலியரும் பலஸ்தீனியரும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது நாம் ஏன் ஒரு சமாதானத் தீர்வுக்கு வரமுடியாது?

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

இரு இனமக்களும் சந்திப்பதற்கான இடைவெளி என்ன என்பது ஆராயப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் சமாதானத் கதவுகளை திறந்தால் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் — இவ்வாறு அவர் கூறினார் என அறிவிக்கப்பட்டது. (உ-3)

## அன்னை பூபதி நினைவு சிரமதான நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28
அன்னை பூபதியின் நினைவு நாட்களை ஒட்டி நடைபெற்றுவரும் சிரமதான நிகழ்வுகளில் இன்று கொடிகாமம் சந்தையில் இடம்பெயர்ந்தோர் முகாம் துப்புரவு செய்யப்படும். (த)

## அரசு தனது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களில் பயங்கரவாதிகளும் இருக்கலாம். ஆனால் அனைவருமே பயங்கரவாதிகள் அல்லர்.

தூதுக்குழுக்கள் பல யாழ்ப்பாணம் சென்று வருகின்றன. ஆனால் அவை இதுவரை பிரபாகரனைச் சந்திக்கவில்லை.

சபாநாயகரும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று வர எண்ணியுள்ளார். அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் அரச தூதுக்குழுவும் சென்று பிரபாகரனுடன் நேரடியாகப் பேசவேண்டும். அன்ரன் பாலசிங்கத்திடமோ அல்லது வேறு எவருடனுமோ தூதுக்குழுக்கள் பல சென்று போவதால் பயன் ஏதுமில்லை.

பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண மக்கள் சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடித்தவர்கள். இன்றோ நிலைமைவேறு.

இந்நிலைமைக்கு யார் காரணம்? நாம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறோம். எமது கட்சியின் தனிச் சிங்கள மொழிச் சட்டமே காரணம் என நீங்கள் கூறுகிறீர்கள்.

கடந்த 17 வருடங்களாக நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள். மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கலாமே

ஆகவே இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளான நாம் இருசாராருமே காரணமும் பொறுப்பும் ஆவோம்.

யாழ்ப்பாண பகுதியை நான் நன்கறிவேன் அங்கு கல்வி கற்றவன் நான் அங்குள்ளவர்கள் ஒழுங்கை, கட்டுப்பாட்டைப் பேணுபவர்கள். இன்றோ நிலைமைவேறு.

இன்றுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக சகலரும் ஒன்றிணைந்து அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.—என்றார். (உ)

# 93-94 பல்கலை. அனுமதி வெட்டுப்புள்ளி

| | மருத்துவம் | பல் மருத்துவ விஞ்ஞானம் | விலங்கு மரு. விஞ்ஞானம் | விவசாயம் | உயிரியல் | பொறியியல் I | பொறியியல் II | பௌதிக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை. | கட்டடக் கலை. | நில அளவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 271 | 268 | 264 | 253 | 249 | 277 | 272 | 235 | 283 | 265 | 273 | 243 | 197 | 269 |
| 2. கம்பஹா | 257 | 256 | 254 | 249 | 240 | 260 | 256 | 215 | 280 | 264 | 263 | 241 | 211 | 250 |
| 3. களுத்துறை | 261 | 260 | 258 | 252 | 241 | 263 | 259 | 224 | 275 | 263 | 272 | 250 | 191 | 259 |
| 4. மாத்தளை | 250 | 247 | 246 | 241 | 231 | 227 | 221 | 183 | 256 | 248 | 271 | 250 | 190 | 211 |
| 5. கண்டி | 263 | 262 | 261 | 254 | 243 | 268 | 263 | 216 | 273 | 260 | 265 | 250 | 205 | 257 |
| 6. நுவரெலியா | 217 | 215 | 213 | 205 | 189 | 183 | | | 254 | 245 | 242 | 235 | | |
| 7. காலி | 269 | 268 | 262 | 253 | 248 | 275 | 270 | 230 | 277 | 264 | 274 | 250 | 205 | 269 |
| 8. மாத்தறை | 266 | 265 | 264 | 255 | 246 | 271 | 269 | 225 | 278 | 263 | 270 | 250 | 208 | 268 |
| 9. அம்பாந்தோட்டை | 252 | 251 | 250 | 246 | 231 | 238 | 236 | 180 | 247 | 234 | 260 | 250 | 202 | 233 |
| 10. யாழ்ப்பாணம் | 266 | 265 | 261 | 254 | 248 | 284 | 272 | 237 | 286 | 267 | 266 | 246 | | 269 |
| 11. கிளிநொச்சி | 233 | 232 | 224 | 209 | 190 | 234 | 200 | 197 | 253 | 239 | 234 | 234 | | |
| 12. மன்னார் | 222 | 207 | 202 | 200 | 182 | 198 | | 286 | 272 | 254 | 266 | 250 | | |
| 13. முல்லைத்தீவு | 207 | 205 | 204 | 194 | 190 | 246 | 240 | 215 | 259 | 245 | 237 | 250 | | 181 |
| 14. வவுனியா | 215 | 206 | 203 | 202 | 184 | 206 | 203 | | 270 | 267 | 254 | 237 | | 194 |
| 15. திருகோணமலை | 224 | 216 | 211 | 202 | 191 | 237 | 229 | 181 | 273 | 253 | 247 | 241 | | 225 |
| 16. மட்டக்களப்பு | 234 | 233 | 232 | 228 | 216 | 234 | 218 | 186 | 278 | 262 | 260 | 250 | | 216 |
| 17. அம்பாறை | 245 | 245 | 244 | 238 | 224 | 235 | 224 | 180 | 270 | 256 | 261 | 249 | | 221 |
| 18. புத்தளம் | 258 | 257 | 256 | 246 | 231 | 243 | 240 | 202 | 267 | 257 | 266 | 247 | | 238 |
| 19. குருநாகல் | 257 | 255 | 254 | 249 | 241 | 247 | 242 | 205 | 272 | 259 | 268 | 250 | 204 | 239 |
| 20. அநுராதபுரம் | 223 | 222 | 218 | 218 | 210 | 180 | | 187 | 256 | 239 | 269 | 246 | | |
| 21. பொலநறுவை | 223 | 220 | 215 | 212 | 197 | 203 | 184 | | 249 | 230 | 245 | 242 | | |
| 22. பதுளை | 240 | 239 | 237 | 230 | 214 | 237 | 232 | 184 | 256 | 240 | 266 | 247 | 193 | 226 |
| 23. மொனறாகலை | 210 | 203 | 197 | 190 | 183 | 210 | | | 250 | 230 | 262 | 238 | | |
| 24. கேகாலை | 256 | 255 | 254 | 248 | 236 | 246 | 241 | 200 | 269 | 260 | 276 | 250 | 191 | 236 |
| 25. இரத்தினபுரி | 255 | 254 | 253 | 247 | 236 | 225 | 223 | 182 | 267 | 257 | 274 | 250 | 204 | 222 |

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணர் பொன்னுத்துரை
(திருக்கண்டு)

அச்சுவேலி யோன் இராசா வீதியில் வசிக்கும் திருக்கண்டு கொழும்பில் 25-3-1994 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், சந்திரவதனி(பிரான்ஸ்), சந்திராதேவி சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரசேகர் (இத்தாலி), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கமலாம்பிகை, லலிதா, யோசெவ், பாலசூரியன் ஆகியோரின் மாமனாரும், டனிசுரேஸ், ஜெனிற்றா, விறஜியா, ஜெயரஞ்சினி, ஜெயநீதன், திலேஸ், பொபினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 31-3-1994 ஆம் திகதி கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
R. பாலசூரியன்
(மருமகன்)

யோன் இராசா வீதி,
அச்சுவேலி.

(30111)

### திருமதி மரியம்மா யோசப்

திருமதி மரியம்மா யோசப் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற டானியல் யோசப் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பேனாட் இம்மானுவேல் (துறைமுக அதிகார சபை, கொழும்பு) றேமன்ட் (அரசினர் வைத்தியசாலை, பதவியா), சிறில்(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அனுராதபுரம்), கிறிஸ்ரீன்புஸ்பம், விக்ரோறியா, பரிமளம், மாட்டின் செல்வரட்னம் (ஜேர்மனி), புறூனோ குணரத்தினம் (மானிப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்), லிக்லி. சாள்ஸ் (ஆனந் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிசிலியா, பேளின், மல்லிகா (யா / திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலம்), வீனஸ், ஜொய்ஸ் ஜெர்மனி) இந்திராணி, கிளாரன்ஸ் (யாழ் ப. நோ. கூ. சங்கம்), டனிதம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற J D. ஆசிர்வாதம், ஞானம்மா, நேசம்மா, J. D. மத்தியாஸ், வணபிதா புறூனோ டானியல், J. D டேவிற் ஆகியோரின் மைத்துனியும், பற்றீசியா, டதமினி மஞ்சுளா, ஆசீர், முகுந்தன், சோபனா, சாந்தினி, ரவீஸ், சுபாஜினி சுதர்சனி சுகந்தினி, சர்மினி, ஜெறோம், நிசாந்தி, சிவோணி, டெபோறா, பிரான்சிஸ்கா, அனோஜா, அர்ச்சனா, அனோசன், ஜொவ்றின், ஜோசெப், ஜோப்பியன், ரெஜினோ, வியோலின் ஸரன், ரவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29 - 3 - 1994 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின்னர் மல்லாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

யோமாறி,
மல்லாகம்.

(7044)

### இராசையா சின்னையா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும். கட்டுவன் தன்ணீர்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சின்னையா நேற்று (27 - 03 - 94) காலமானார்.

இவர் வசந்தாதேவியின் அன்புக் கணவரும், கோபாலகிருஷ்ணன் (ஜேர்மனி), சாந்தமெளரி (சுவிஸ்), ஆனந்தகிருஷ்ணன் (சுவிஸ்), ராதாகிருஷ்ணன், கௌசலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), திருச்செல்வம், பவளராணி (பூவரசங்குளம்), கந்தசாமி, இந்திராணி, சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்குமாரின் அன்பு மாமனாரும் ஜெனித்தாவின் அன்புப் பேரனும், வல்லிபுரம், சரஸ்வதி, பரராசசிங்கம், சின்னமணி (சுவிஸ்), தனபாலசிங்கம் (ஜேர்மனி), சின்னமலர் (ஜேர்மனி), சந்தினி (ஜேர்மனி), சாந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (28-3-94) காலை 11 மணியளவில் ஒஸ்காலேன், வேம்பன் மயானத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ராதாகிருஷ்ணன் (மகன்)
அருளம்பலம் ஸ்ரீதரன

சின்னமணி கடை அருகில்,
உரும்பிராய் கிழக்கு.

(30117)

## 75 கோடி ரூபா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடற்படைத் தளபதி சமரசேகரா அடுத்த மாதம் சீனாவில் இருந்து திரும்புவதற்கு முன்னர், ஜனாதிபதி இந்த விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கத் தவறினால் — சீனாவில் இருந்து திரும்பி வந்ததும் தமது பதவியை கடற்படைத் தளபதி இராஜினாமாச் செய்யக் கூடும் என்று கருதப்படுகிறது.

— இவ்வாறு "சண்டே ஐலண்ட்" பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது (உ-3)

## யாழ். மருத்துவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆகிய துறைகளுக்கு கடந்த வருடத்திலும் கூடுதல் மாணவர் தெரிவாகியுள்ளனர்.

கலைத்துறைக்கு 3 ஆயிரத்து 198 பேரும், பௌதிக விஞ்ஞானத் துறைக்கு ஆயிரத்து 47 பேரும், முகாமைத்துவ கல்விக்கு 643 பேரும் தெரிவாகியுள்ளனர்.

மருத்துவம் தவிர்ந்த ஏனைய துறைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் பொதுவாக சென்ற வருடத்தைவிட குறைந்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் முகாமைத்துறைக் கல்விக்கான வெட்டுப்புள்ளி 286 ஆகும். இதுவே சில மாவட்டங்களினதும் சகல துறைகளுக்குமான வெட்டுப்புள்ளிகளுடன் ஒப்பிடும்போது உயர்ந்ததாகக் காணப்படுகிறது.

(உ-3)

## இனவாதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சார்ந்த தலைவர்கள் தான் இனவாதிகளாகச் செயற்படுகின்றனர் என்பதை அடிக்கடி கூறிவந்துள்ளோம்

முன்னாள் ஜனாதிபதியின் மறைவுக்குப் பின்னர் இனவாத உணர்வு மீண்டும் மேல் எழும்பத் தொடங்கிவிட்டது.

இந்நிலையில் தான் மக்களின் அபிலாஷைகளை, எதிர்பார்ப்புக்களை உணராது செயற்பட முனைந்தவர்களுக்கு தென்மாகாண மக்கள் நல்ல படிப்பினையை ஊட்டியுள்ளனர்.

காலிமாவட்டத்தில் தெனியாய போன்ற பகுதிகளில் சிறுபான்மை இன மக்கள் வாழும் பகுதிகளில் கூட ஐ.தே கவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட சிறுபான்மை இன மக்கள் வாழும் காலி மாவட்டம் போன்ற பகுதிகளில் கூட சிறுபான்மை இன மக்கள் சக்தி பெற்றவர்களாக இருப்பார்களாயின் மத்திய, ஊவா மற்றும் ஏனைய மாகாணங்களில் வாழும் சிறுபான்மை இன மக்களின் சக்தி பற்றி விளங்கிக் கொள்ளலாம்.

அவ்வகையில் பெரும்பான்மை இன மக்கள் மாத்திரமல்லர். சிறுபான்மை இன மக்களும் இத்தேர்தல் மூலம் நல்ல ஒரு படிப்பினையை அரசியல்வாதிகளுக்கு ஊட்டியுள்ளனர் என்றால் அது மிகையாகாது —

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார். [உ-3]

# நீர்கொழும்பு தமிழ் அகதிகள் பாதுகாப்புக்கு விமானப்படை!

கொழும்பு, மார்ச் 28
நீர்கொழும்பு குடாப்பாடு காளி கோயிலில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளின் பாதுகாப்புக்கு விமானப் படையினர் சேவைக்கு அழைப்பதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சு பிறப்பித்துள்ளது:

குடாப்பாடு பகுதியில் தொடர்ந்து நிலவிவரும் பதற்றம் காரணமாக ஆலயத்தில் தஞ்சாடைந்துள்ள தமிழ் அகதிகளுக்கு பூரண பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மேற்படி உத்தரவை பிறப்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

நீர்கொழும்பில் தமிழ் அகதிகளின் பாதுகாப்புக்கு இரு பொலீஸார் மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே விமானப்படையினரின் பாதுகாப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. [உ-3]

## ஜி.சீ.ஈ..(சா.த) பரீட்சைமுடிவுகள்

கொழும்பு, மார்ச் 28
ஜி.சீ.ஈ..(சா.த.)பரீட்சை முடிவுகள் இவ்வாரம்— மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர்—வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்துக்கான பரீட்சை முடிவுகளை தொண்டர் நிறுவனங்கள் மூலம்— விமானத்தில்— யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-9)

## தபால் சேர்க்கலாம்

நாளை மறுதினம் புதன் கிழமை பருத்தித்துறையில் இருந்து கொழும்பிற்கு புறப்படும் என எதிர்பார்க்கப்படும் "மாஹோ" கப்பலில் வெளியூர்களுக்கான தபால் பொதிகளும் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே வெளியூர்த்தபால்களை அனுப்ப விரும்பும் பொதுமக்கள் அவற்றை நாளை காலை 9 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் சேர்க்கலாம் என யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

## பொலீஸ் சூட்டுக்கு சிறுவன் பலி!

யாழ்ப்பாணம் மார்ச் 28
மட்டக்களப்பு ஆரசடி வீதியில் கடந்த புதனன்று பொதுமக்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 9 வயது பாடசாலை மாணவன் ஒருவன் அந்த இடத்திலேயே பலியிழந்தான்.

கந்தசாமி தனசாந்த (9 வயது) என்ற மாணவனே கொல்லப்பட்டான். (உ-3)

## சபாநாயகரின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பான விடயங்களைக் கனைத்து வருகிறார்.

★ சபாநாயகர் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பு திரும்புவார். முதலாம் திகதி யாழ் செல்வார்.

★ சபாநாயகரும் அவருடன் செல்லும் இருவரும் பலாலிக்கு விமானமூலம் செல்வர். அதன் பின் இராணுவத் தளத்திலிருந்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு உறுப்பினர்களுடன் வெளியேறுவர்

★ சபாநாயகர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கு ஹெலிக்கொப்டரில் செல்வதற்கான கோரிக்கை குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் கவனமாக ஆராய்கின்றன.

இந்த விடயம் மிக உயர் மட்டத்தில் ஆராயப்பட்டது. ஆனால் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் சபாநாயகர் ஹெலிக்கொப்டரில் சென்று இறங்குவதை எதிர்த்துள்ளனர்.

★ ஹெலிக்கொப்டரும் அதன் ஓட்டுநர்களும் பாதுகாப்பாக வந்து செல்லலாம் என புலிகள் வழங்கிய உறுதியை எவ்வளவு தூரம் ஏற்கலாம் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

★ தனியார் கம்பனிகளின் ஹெலிமூலம் மும்மரா செல்ல அனுமதிப்பது குறித்தும் ஆராயப்பட்டது ஆனால் அதிலும் சிக்கல் உள்ளது.

தனியார் கம்பனி ஹெலிகள் அநுராதபுரத்துக்கு அப்பால் செல்வதற்கு அந்த கம்பனிகளுக்கு காப்புறுதி வழங்கிய நிறுவனங்கள் அனுமதிக்குமா என்பது முதலாவது சிக்கல்.

மற்றையது, அரசால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படாத விஜயத்தை சபாநாயகர் மேற்கொள்வதால் தனியார் கம்பனி ஹெலிக்கொப்டருக்கான கட்டணத்தை யார் செலுத்துவது என்பது

எனவே ஹெலி மூலம் யாழ்ப்பாணத்துக்குள் செல்ல சபாநாயகருக்கு வசதி கிட்டாவிட்டால் அவர் பலாலியிலிருந்து பருத்தித் துறைக்குச் சென்று அங்கிருந்து வீதி வழியாக யாழ்ப்பாணம் செல்வார். (இ-3-9)


NATIONAL CERTIFICATE IN ENGLISH
(N.C.E) Part - 1
CLASSES ON MONDAYS AND FRIDAYS 3 TO 4 30 P.M.
Commencement: 28. 03. 1994
Lectures: KANDIAH NAVARENDRAN
JAFFNA ENGLISH ACADEMY
27, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.
LUXINTENEBRIS
(பி-7618)


[illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 108/1 இல் [illegible] அச்சகத்தில் 28 03 1994 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org